294.8111
2836
Q22:417.21
N30

சிவமயம்

மயிலுமயிலுந்துணை

# திருமலைப்பதிகம்.

இஃது

பண்பைநகர்த்திருமலையின் கண்ணெழுந்தருளியிருக்கும்
பாலசுப்பிரமணியக் கடவுள்மீது.

திருநெல்வேலிஜில்லா சங்கரநயினார்கோவில் தாலுகாச்
சிந்தாமணிநகரம் கனம் மகா-ா-ா- பேச்சிமுத்து
முதலியாரவர்கள் குமாரர்
**S. P V. P.** வாலசுப்பிரமணிய முதலியார்,
இயற்றியது:

மதுரைஜில்லாப் பெரியகுளந் தாலுகாச் சீலையம்
பட்டி வித்வான் பொன்னையாபிள்ளை
என்ற மகா-ா-ா-ஸ்ரீ **S. K.** அருணாசலப்பிள்ளை
அவர்களால் பரிசோதிக்கப்பெற்று

சிந்தாமணி கனம் மகா-ா-ா-ஸ்ரீ பா. நயினார்முதலியார்
அவர்களால்

சரஸ்வதி அச்சியந்திரசாலையில் பதிப்பிக்கப்பெற்றது,
1924

224800



# சாற்றுக்கவிகள்.

---

மதுரை ஜில்லாப் பெரியகுளந் தாலூகா கண்டமனூர்
சமஸ்தான வித்வான் கனம் ப்ரம்மஸ்ரீ
வெங்கட நரசிம்ம ஐயரவர்களால்
இயற்றியது.

வனந்தங்கப்ப ங்கய மென்மலரிலளி யினங்குடைய
மதுவார்ந்தோடி
யனந்தங்கப்ப லைபுரச் சொல்லங்கேதிராயிரங் கதிர்மே
லடர்வுற்றோங்கித்
தினந்தங்கப்ப வநிதிபந் திகழ்திருச் சிந்தாமணிவாழ்
சீமானென்னு
மினந்தங்கம் படைத்தொளிர் பொன் விருப்பு திருமானி
மேமேலோன் மாதோ [கரு

---

கனகமலை விலைமுகனைப் பணிபேச்சி முத்தின்ற
கனவான் சொற்பா

கனகமலை யெனுமிருவர் கருணைதிகழ் புகழ்க்கருணன்
கமலமாங்கோ

கனகமலை யனமுகங்கட் கனியருளங் கனிகாமன்
கலைதேருத் தாங்

கனகமலை யின்றியென்னூற் கவிக்குமுறை விரித்துரைக்கக்
கற்றோன் மன்னே

---

பத்தி யன்புமிகும் வாலசுப்பிரமண்ய பாவலவன்
பழந்தேன் பாற்போற்

றுத்தியங்கொள் சொற்சுவையுந் துதிச்சுவையுங் கற்ப
துலங்க மேன்மேல் [னையுங்

எத்திசையு மிசையிசையத் திருமலைப் பதிகம் பதிக
மிருட்போர் யார்க்குஞ்

சித்தி முத்திதாற் கிலைதார் வித்தெனச் செப்பப்புலவர்
செப்பி னனே.

---

## சேற்றூர் ஸமஸ்தான குலகுருவாகிய ஸ்ரீலஸ்ரீ. ஞானனந்த சிவப்பிரகாச சிதம்பரதேசிக சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளியது.

கருமலைநேர்மன மிளகளவு மிளகாக் கமவர்தம்மேற்
கவியைப்பாடி
இருமலை யேயுறும் புலவீருமக்கொன்று நாமிசைப் போ
மினிதாக் கேண்மின்
வருமலையிற் கடுநகரும் பாற்கன்பன் வாலசுப்ர
மணியன் வாழ்த்துந்
திருமலைவேட் பதிகமதைப் புகன்றிடுவீர் செல்வமெலாஞ்
சேர்வீர் தானே

## சேற்றூர் சமஸ்தான வித்வான் மகா-ள-ள-ஸ்ரீ கணபதிக்கவிராயர் அவர்களால் இயற்றியது

முற்பதிகஞ் சிகரிவள நற்பதிக்குக் கவின்காட்டு
முறைபோ லாற்கு

பொற்பதிகஞ் சிவணனுறுமெனற் கொருவாறினை வரும்
வகைபுகன்றான் பன்னூல்

கற்பதிகஞ் சிப்பதியெண்ணான் கறத்திதருகு
மரக் கடவுளார்க்கு

நற்பதிகஞ் சிற்பரற் கன்பன் வாலசுப்பிரமணிய
நாவலோனே

---

இந்நூற் பரிசோதகராகிய, சிலையம்பட்டி வித்வான்
பொன்னையாபிள்ளை என்ற மகா-ள-ள-ஸ்ரீ
எஸ். கே. அருணாசலம்பிள்ளை அவர்களால்
இயற்றியது

இருகனகம னையவிரு தனமிடைகுந் தளத்திருமா
னிடத்தார் மாறன்

மருகனகம கிழமன்பன் பேச்சிமுத்து வள்ளலருண்
மகவாய் வாழ்த்து

மொருகனகம கனிவனென் றுரைசாலுச் சிதன்கலைக
ளுணர்ந்தோ னின்பந்

தருகனகற டணிரர்பன் சாசனன் சுந்தரசொரூபன்
றள தாட்டீகன்

---

எனவரும்பு னிதன் வாலசுப்பிரமண்ய பூபால
னினிப்பா யன்பு
தனவரும்பு த்தமுத ருசிதுலங்கு திருமலைப்பதிகஞ்
சொற்றான் பாத்துப்
பனவரும்பு மூரைமன திற் பதியாம லரியானும்
பயமேற் கொண்டால்
வனவரும்பு நகைப்பனுவ லாட்டிபருட் கவிஞரிலார்
வழுத்து வர்ரே

உ

சிவமயம்.

மயிலூர்ந்துணை.

# திருமலைப்பதிகம்.

விநாயகர் துதி.

மாமேவு பண்பைநகர் வாழுமயில் வாகனன் மேற்
பாமேவு நற்பதிகம் பாடவே தேமேவு
கந்தனுக்கு முன்னுதித்த கற்பகவிநாயகனாந்
தந்திமுகன்றாளே சரண்

நூல்,

திருவாரு மதிமானு முகங்களாறுஞ்
செவ்வாயுங் கருணை விழித்திருவுந்தோன்ற
மருவாருங் குழல்வள்ளி தெய்வயானை
வலமிடமுந்து லங்கமயின் மகிழ்வாயூர்ந்தே

சென்னை -600 008

வருவாயித் தருணமெனைக் காக்கப்பண்பை
வளமிகுந்த திருமலையார் வடிவேற்கந்தா
திருவாழு மணிமார்பன் மருகனென்னத்
திகழ்பால சுப்பிரமண்ய தேவ தேவே (1)

பண்டுசரவணத்து தித்துச்சூரபத்மன்
பகைதவிர்த்துப் பண்ணவரைப் பரிபாலித்தே
விண்டயனுந் திபுரிபக்கருணையாய்த்தே
வேந்திரற்கு மணிமகுடம் வியந்துசூட்டி
யெண்டிசையும் புகழவளரிறை வாகின்றன்
இணையடியைப் பணிபவருளென்றும் பண்பைத்
திண்டிறல்கொள் திருமலைமேலெவரும்போற்றத்
திகழ்பாலசுப்பிரமண்ய தேவ தேவே (2)

தென்னைகமுகாம்பை பலாக்கொய்யா மேலாஞ்
செண்பக மாமுதற்றருக்கள் செழிக்குங்காவும்
பன்னலக்கொண் முல்லை யிருவாச்சி பிச்சிப்
பரிமள நந்தன வனங்கள் பலவுஞ்சூழ்ந்தே

வன்னவனங் கமலமிசை துயில்கடாக
வளமுமிகப் புகழோங்கி வளரும் பண்பைச்
செந்நெல்வய லிலகுதிரு மலைமேலென் றுந்
திகழ்பால சுப்பிரமண்ய தேவே தேவே (3)

ஆலமுண்ட நீலகண்டன் பாலாவுன்றன்
அடியிணையைப் பணியுமன்பு மலைசூழ்ந்த
ஞாலமகிழ் கல்வி செல்வ முதலாவுள்ள
நானன்கு பேறுமுற ரக்ஷிப்பாய் நின்
பாலனுனை யன்றியொரு கதியுங் காணேன்
பழம்பொருளே பழனவளம் பயிலும் பண்பைச்
சீலமிகுந் திருமலைமேற் சிந்தை கூர்ந்தே
திகழ்பால சுப்பிரமண்ய தேவ தேவே (4)

மானுளங் கண்படவார் மயலாலுன்றன்
மலரடியை மறந்துவம்பர் வசத்தே நட்பாய்
நானுளு மகம்பாவமிகமேன் மீறி
நானென்ற வாணவமே நயந்தேனென்னே

கானுறு நீபமலர்ப் புயனே வுள்ளங்
கனிந்து நயந்தேன் றிருத்திக் காத்தாள் பண்டைத்
தேனுறுந் திருமலைமேற் செகம்வான் போற்றத்
திகழ்பால சுப்பிரமணிய தேவதேவே (5)

எத்தனைதான் றப்பிதங்களியற்றி யென்று
விருந்தாலு மஃதை மனத்தெண்ணு தன்பாய்ப்
புத்திரன்செய் குற்றமெலாம் பொறுத்தாடந்தை
போலுமெனைக் கண்பார்த்துப் புரப்பா யென்றும்
அத்தனுக்கு மகமகிழ்வா யுபதேசஞ்செய்
யாறுமுகா பன்னிருகை யமலாபண்டைச்
சித்திரஞ்சேர் திருமலையைச் சிந்தைகூர்ந்தே
திகழ்பால சுப்பிரமண்ய தேவதேவே (6)

பஞ்சமுக னீன்றவனைப் பணிந்தாற் பூத
பசாசு பஞ்ச பாதகமும் பறந்தே போகும்
வஞ்சனை சூனியம் பில்லி மாறாட்டங்கள்
வாராது சென்மவினை மருவிடாது

நஞ்சனைய நமன்றூதரணுகாசென்றே
நம்படியேன்றனைப் புரந்தாளுறும் பண்பைச்
செஞ்சொல் வள்ளிக்கு கந்த திருமலைவாழ் கந்தா
திகழ்பால சுப்பிரமண்ய தேவ தேவே (7)

காராருந் திடவடிவக் கடாமேலந்தக்
காலன்வருங் காலுமுன் கால் கருதுவேனான்
கூராரும் வேற்குமார வடியேன் செய்த
குற்றமெலாங் குணமாகக் கொண்டேயன்பாய்
வாராருந் தோகை மயின்மிசை நீயென்முன்
மனமகிழ்வா யஞ்சலெலன வந்தாள் பண்பைச்
சீராருந் திருமலைமேற் செகம்வான்போற்றத்
திகழ்பால சுப்பிரமண்ய தேவ தேவே (8)

மலைமகளுக் குவந்த செல்வ மைந்தா வாவா
வள்ளி தெய்வயானை மணவாளா வாவா
கலைமுனிவர்க் கருள்கருணா கரனே வாவா
கரங்கள் பனிரெண்டுகொண்ட கந்தா வாவா

Q22:417-216 N30



அலை துயிலுமான் மருகா முருகா வாவா
வடியேனைப்புரந் தருளவன்பாய்ப் பண்டைச்
சிலையிலுயர் திருமலைமே லெவரும் வாழ்த்தத்
திகழ்பால சுப்பிரமண்ய தேவ தேவா (9)

வன்னமயிலுகந்து வரும்வலவா போற்றி
வண்டமிழ்க் கீரனுக்கருள் செய்வரதாபோற்றி
[illegible]ன்னிரு புயாசலவேற் பரனே போற்றி
பாவையுமையாள் பெற்ற பாலா போற்றி
என்னிதயமகலாத விறைவா போற்றி
யிமையவர் சேனாபதியா யென்றும் பண்பைத்
தென்னிலந்திருமலையைச் சிந்தை கூர்ந்தே
திகழ்பால சுப்பிரமண்ய தேவே போற்றி (10)

## வாழி.

பார்வாழி பண்ணவர்கள் பயில்வான் வாழி
பழமறை வஸ்தாதியென்னும் பாணர் வாழி
கார்வாழி கமலமலர்க் கண்ணன் வாழி

கலைமகணன் முநன் வாழி கற்றோர் வாழி
சீர்வாழி திருமலைவாழ் சிவப்பன் வாழி
செய்பொனணி மணிமாடந் திகழும் பண்ணை
யூர்வாழி யுதயனுடு பதியும் வாழி
யுவந்த ஐயன் சொலிப்பதிக முபர்வாய் வாழி (11)

---

முற்றுப்பெற்றன.

# விளம்பரம்.

## இந்நூற் பரிசோதகராலியற்றியவை.

| | | விலை ரு அ ப |
|---|---|---|
| 1. | திருநகரங்கண்ட படலம்<br>திருவவதாரப்படலம்<br>திருமணப்படலம் } இம்மூன்றுஞ்சேர்ந்து மதுரைத் திருவிளையாடர் கும்மி | 0—4—0 |
| 2. | சந்தணநல்லூர ஆபிரலிங்கேசர்மாலை அடைக்கலப்பத்துடன் | 0—2—0 |
| 3. | அரிகேசநல்லூர் சிவகாமிமாலை | 0—2—0 |
| 4. | திருவரிகைப்பதிகம் | 0—0—6 |
| 5. | புதுவைப்பதிகம் | 0—1—0 |
| 6. | சென்னிமலைப்பதிகம் | 0—1—0 |
| 7. | கூடலூர் நவநீதகிருஷ்ணன்பதிகம் | 0—0—6 |
| 8. | ஷை பவனிக்காதல் | 0—8—0 |
| 9. | சேத்தூர்ஜமீன் மேட்டுப்பட்டி மாரியம்மைபதிகம் | 0—0—6 |

என்னுலியற்றிய இவைகளை விரும்புவோர் அடியிற்கண்ட என் விலாசத்திற்கெழுதி பெற்றுக்கொள்ளலாம்.


விலாசம்

...பொன்னையாபிள்ளை என்ற
...ணாசலப்பிள்ளை வித்வான்
...டி. பெரியகுளம் தாலுகா
மதுரை ஜில்லா.


22 L 4500